2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 57/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – சிவசூர்யா |
| தகப்பனார் பெயர்: | தங்கப்பாண்டி |
| ஊர்: | தேவாரம் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 21 |

06.03.2026

(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திருமதி.காளீஸ்வரி, சிறப்பு சார்பு ஆய்வாளரால் அடையாளம் காணப்பட்டு, பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேவாரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.02.2025ம் தேதி இரவு 11.00 மணிக்கு நானும், எனது தம்பி சிவசந்துரும் வேலையை முடித்துவிட்டு, ஐயப்பன்கோவில் தெரு, பெரிய ஓடைத்தெருவில் உள்ள எனது வீட்டின் அருகில் சென்றோம், அப்போது எங்கள் வீட்டின் அருகில் கூட்டமாக இருந்தது. நான் விசாரித்தப்போது அங்கு சண்டை நடந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் போட்டேன். அனைவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.02.2025 ம் தேதி இரவு 11.30 மணியளவில் நானும், எனது அண்ணன் சிவசந்துருவும் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தோம். மூனாண்டிப்பட்டியைச் சேர்ந்த ஜெயச்சந்திரனும், பேச்சியம்மன்கோவில் தெருவை சேர்ந்த ராமர் மகன் விக்னேஷ்வரனும், எங்கள் வீட்டின் கதவை எட்டி உடைத்து, வெளியே வாடி என்று அசிங்கமாக பேசிக் கொண்டிருந்தார்கள், நானும், எனது தம்பியும் சத்தம் போட்டு கண்டித்தோம், அப்போது எங்களை அசிங்கமாக பேசி கையால் அடித்து பிரச்சனை செய்து, வீட்டிலிருந்து வெளியே வந்த எனது அம்மாவை ஜெயச்சந்திரன் சேலையை பிடித்து தெருவில் இழுத்து மானப்பங்கப்படுத்தினார் என்றும், எனது அம்மா விடுவிக்க முயற்சி செய்தப்போது ஜெயச்சந்திரன் அவரது இடுப்பிலிருந்து கத்தியை எடுத்து குத்தியப்போது நான் விலகிக்கொண்டேன் என்றும், அதனால் கத்தி என்மீது படாமல் கீழேவிழுந்துவிட்டது என்றும், இல்லையென்றால் ஜெயச்சந்திரன் என்னை குத்திக்கொன்றிருப்பார் என்றும், அப்போது எங்கள் சத்தம் கேட்டு தெருவில் இருந்தவர்கள் வந்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் இருவரும் எங்களை பகைத்துக்கொண்டால் தேவாரத்தில் குடியிருக்க விடமாட்டோம் என்றும், உங்கள் சாவு எங்கள் கையில் தான் என்று உயிர் பயத்தை ஏற்படுத்தி அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், எனக்கு வெளிக்காயங்கள் இல்லை என்றும், எனது அம்மாவை மானப்பங்கப்படுத்தியதால் அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டது என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளும், நாங்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:44 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026